# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590**

**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**
**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 19914/விசாரணை/E/2023**

| | | |
|---|---|---|
| திரு சொ.குமார் | -- | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>சோழிங்கநல்லூர் வட்டம்,<br>சென்னை | -- | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த ஆவணங்களை இன்று (10.06.2026) பரிசீலித்த ஆணையம், இவ்வாணையத்தின் 10.09.2025 நாளிட்ட உத்தரவுகளை இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் / சோழிங்கநல்லூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர், இன்று வரையில் (11.06.2026) முழுவதுமாக நிறைவேற்றவில்லை என்பதை கண்டனத்துடன் பதிவு செய்கிறது/

2) இவ்வாணையத்தின் 10.09.2026 தேதியிட்ட ஆணை பத்தி 5(i) உத்தரவு குறித்து பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 26.09.2025 நாளிட்டு பதில் கடிதம் அனுப்பியுள்ளார். அது தனக்கு திருப்தியளிக்கவில்லையென மனுதாரர் 17.12.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். வழங்கப்பட்ட பதிலை பரிசீலித்த ஆணையம் மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கருதுகிறது.

3) இந்நிலையில், இவ்வழக்கின் மேல்முறையீட்டு அலுவலர் / சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் இவ்வாணையத்தின் 10.09.2025 நாளிட்ட ஆணையில் பத்தி 5(iii)-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்றிவிட்டு, மனுதாதரருக்கு பதிவஞ்சல் மூலம் இழப்பீட்டுத் தொகை ரூபாய் 3,000/-க்கான வரைவோலையை வழங்கிவிட்டு, அதன் நகலையும், மனுதாரர் அதனை பெற்றுக் கொண்ட வழங்கிய ஒப்புகை அட்டையின் நகலையும் இவ்வாணையத்தில் 30-07-2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

4) மேலும், இவ்வாணையத்தின் 10.09.2025 தேதியிட்ட உத்தரவினை நிறைவேற்றத் தவறிய பொதுத் தகவல் அலுவலர் மீது (10.09.2025 அன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் / சோழிங்கநல்லூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்) மேல்முறையீட்டு அலுவலர் / சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் விசாரணை நடத்தி அவர் மீது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அதிகபட்ச

அபராதம் ஏன் விதிக்கலாகாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் பெற்று இவ்வழக்கின் மேல்முறையீட்டு அலுவலர் மூலமாக இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று தவறாமல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.

5) இவ்வாணையத்தின் 10.09.2025 நாளிட்ட உத்தரவில் பத்தி 5(ii)-ல் கூறப்பட்டுள்ளபடி மனுதாரருக்கு பதில் வழங்க தவறிய பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கத் தவறிய, சென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு (தெற்கு) ஆணையம் தனது கண்டனத்தை தெரிவிக்கிறது. இவ்வாணையத்தின் 10.09.2025 நாளிட்ட உத்தரவில் 5(ii)-ல் கூறப்பட்டுள்ளபடி மனுதாரர் அனுப்பிய 6(1) மனுவிற்கு காலதாமதமாக பதில் அனுப்பிய பொதுத் தகவல் அலுவலர் மீது சென்னை வருவாய் கோட்டாட்சியர் (தெற்கு) விசாரணை நடத்தி அவர் மீது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அதிகபட்ச அபராதம் ஏன் விதிக்கலாகாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் பெற்று வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு) தனது அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்தில் 30-07-2026 அன்று தவறாமல் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.

6) மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்றாதபட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு) மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் / சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் ஆகியோருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 19914/விசாரணை/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

மேல்முறையீட்டு அலுவலர் /வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை

வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு)

பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை

திரு சொ.குமார்,
எண்.5, வேம்புலி பண்மைணக்காரன் தெரு,
உள்ளகரம், சென்னை - 600 091

Copy to: File
CR/PA